**டாக்டர் உமையாள் இராமநாதன் மகளிர் கல்லூரி,காரைக்குடி.**
(தேசியத் தரமதிப்பீட்டுக்குழுவால் **B+** தகுதிப்பெற்றது)
**(Run by Dr. AlagappaChettiar Educational Trust)**
**தமிழ்த்துறை**

**பாடக்குறியீட்டு எண் 7BTA6C3**

**இலக்கியத் திறனாய்வு**

**வை.வைரமணி**

**உதவிப்பேராசிரியர்**

# SYLLABUS

## பாடக்குறியீட்டு எண் 7BTA6C3

## இலக்கியத் திறனாய்வு

**அலகு** *1* : திறனாய்வாளனும், திறனாய்வும், திறனாய்வு வகைகள், திறனாய்வில் அறிவியல் வழி அணுகுமுறை

**அலகு** *2* : சமுதாயவியல் திறனாய்வு, வரலாற்றியல் திறனாய்வு, உளவியல் அணுகுமுறை, மொழியியல் அணுகுமுறை.

**அலகு** *3* : உருவவியல் திறனாய்வு, அமைப்பியல், பின் நவீனத்துவம்

**அலகு** *4* : அறநெறி அணுகுமுறை, மார்க்சியத் திறனாய்வு, தொல்படிமவியல் அணுகுமுறை, இலக்கிய வகை நிலையியல்

**அலகு** *5* : திறனாய்வும் தத்துவ நெறியும், தலித்தியமும் திறனாய்வும், பெண்ணியத் திறனாய்வு, தமிழில் திறனாய்வு வரலாறு.

**பாடநூல்:**

ந.பிச்சமுத்து - இலக்கியத் திறனாய்வும் கொள்கைகளும், சக்தி பதிப்பகம், சென்னை.

இலக்கியத் திறனாய்வியல் - தா.ஏ.ஞானமூர்த்தி

**பார்வை நூல்:**

1. திறனாய்வுக்கலை - தி.சு.நடராசன் நியூசெஞ்சுரி புத்தக நிறுவனம், 41-பி, சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட், சென்னை-98.

**பாட முடிவுகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| I | இலக்கியத் திறனாய்வு | 7BTA6C3 | CO1 | இலக்கண இலக்கியங்கள் மேம்பட்டு விளங்குவதற்கு அடிப்படைக் காரணம் திறனாய்வும் திறனாய்வாளர்களுமே ஆவார். |
| II | | | CO2 | சமுதாயம் வரலாறு உளவியல் தத்துவம் பெண்ணியம் தலித்தியம் என்று அனைத்துத் தன்மைகளும் ஒரு திறனாய்வாளனால் இந்த உலகிற்கு புதிய அணுகுமுறைகள் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன. |
| III | | | CO3 | கவிதையும் ஒரு வகை கனவு தான் என்று கருதுகின்ற ஃபிராய்டியவாதிகள் இலக்கியத்தை உளவியல் பகுப்பாய்வு முறையில் விளக்குகின்றனர் |
| IV | | | CO4 | கலைப் படைப்பில புறவய உண்மை மிக முக்கியமானது. புறவய உண்மையானது அழகியல் உண்மையாக உருப்பெற்று படைப்பாளியை சார்ந்ததாக அமைகிறது. |
| V | | | CO5 | வினை நிகழ்த்துகின்ற பாத்திரங்களின் வைப்பு முறையும், அவற்றை இடம் நகர்த்துகின்ற முறையும் அமைப்பியல் விளக்கத்திற்கு உட்பட்டவையாகும். |

அலகு-1


திறனாய்வு அறிமுகம்
திறனாய்வாளனும் திறனாய்வும்
திறனாய்வு அணுகுமுறை
திறனாய்வாளன் தகுதிகள்
திறனாய்வு வகைகள்

**உள்ளடக்கம்**

1. திறனாய்வு தன்னுடைய இலக்குகளை நோக்கிப் பயணப்பட வேண்டும்.
2. திறனாய்வு விசாலமான பணிகளையும், நோக்கத்தையும் கொண்டிருக்கிறது.
3. சுருக்கமாக சொல்வதானால் ஒரு நல்ல திறனாய்வாளன் பொறுப்புள்ள இலக்கியவாதியாகவும், ஒரு நல்ல வாசகனாகவும், பொறுப்புள்ள மனிதனாகவும் இருக்க வேண்டும்.
4. திறனாய்வு என்பது ஒரு பகர்மொழி, ஒரு சொல்லாடல், ஒரு வகையான அதிகாரத்தை அல்லது சக்தியை பிரதிநிதித்துவப் படுத்துகிறது.
5. இலக்கியத்தின் மீது அமைய வேண்டிய திறனாய்வு சில சமயங்களில் அதனைப் புயம் தள்ளி விட்டு போகிறது என்பது உண்மை தான்.
6. இலக்கியம் என்பது அடிப்படையில் கலைஞனுக்கும், சுவைஞனுக்கும் இடையிலான ஒரு தகவலியல் செயல்பாடு.
7. இலக்கியத்திற்கு அதன் உள்ளடக்கம் போலவே உருவமும் முக்கியம்.

# இயல் சுருக்கம்

இலக்கியக் கொள்கை – இலக்கியத் திறனாய்வு – இலக்கிய வரலாறு ஆகிய மூன்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன. எனினும் இவற்றுக்குள் சில வேறுபாடுகளும் உண்டு. காலந்தோறும் இலக்கியங்கள் படைக்கப்பட்டு அவ்வப்போது மக்களுக்கு எடுத்துச் சொல்லப்படுகின்றன. இலக்கியத்தைக் கற்கும் போதும்இ கற்பிக்கும்போதும் அதன் கால வரிசை தேவைப்படுகிறது. இலக்கிய ரசனையை விரும்பி அதில் உள்ள நன்மைகளை எடுத்துக் கூறுவதும் இலக்கியக் கல்வியில் அடங்குகிறது. இலக்கியம் காலந்தோறும் வெளிப்படுத்தும் நெறிமுறைகளையும் இது உணர்த்துகிறது. இவ்வாறு இலக்கியம் கற்றுக் கொள்ளக் கூடிய முறைகளில் வேறுபாடுகள் புலப்படுகின்றன.

இலக்கிய வரலாறும் ஓர் ஆய்வின் அடிப்படையில் தான் செய்யப்பட்டு ஒத்துக் கொள்ளப்படுகிறது.

இலக்கியம் ஒரு கலையாகஇ ஒரு சாதனமாக ஒரு சக்தியாக வருணிக்கப்படுகிறபோதுஇ அதனுடைய சாத்தியங்களையும்இ வழிகளையும் திறனாய்வு ஆராய்கிறது. இலக்கியம் ஒரு புதிராக வருணிக்கப்படுமானால் அந்தப் புதிரைத் திறனாய்வு விடுவிக்க முயல்கிறது. இலக்கியம் மக்களுக்கானது: மக்களைப் பற்றி பேசுகிறது: மக்களிடம் போகிறது: மக்களைப் பாதிக்கிறது என்று வருணிக்கப்படுமானால் திறனாய்வு அந்த உறவுகளை இனங்கண்டு விளக்குகிறது.

## வினாக்கள்

1.திறனாய்வு என்பது யாது?

திறனாய்வு என்பது ஒரு உயிருள்ள இஉயிரற்ற பொருளின் பண்புகளைப் பற்றி ஆராய்ந்து உண்மைத் தன்மையையும் அதில் கூறப்பட்ட நேர்இஎதிர் கருத்துக்களை எடுத்துரைப்பது ஆகும்.

2.இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றிய சிக்கலை முதலில் ஆராய்ந்தவர்?

இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றிய சிக்கலை முதலில் ஆராய்ந்தவர் பிளேட்டோ.

3.கவிதையின் இலக்கணம் யாது?

மாதயூ அர்னால்ட் என்பார் கவிதையின் அடிப்படை வாழ்க்கையைப் பற்றிய விமர்சனமே என்றும் அழியா உண்மையும் ஆழமும் மிகுதியாகப் பெற்றுத் திகழ்தலே கவிதையின் இலக்கணமாகும்

என்கிறார்.

**4.** திறனாய்வு என்ற சொல்லை முதன்முதலாக இலக்கியத்தோடு தொடர்பு படுத்தியவர்?

திறனாற்வு என்ற சொல்லை முதன்முதலாக இலக்கியத்தோடு தொடர்பு படுத்தியவர் ஆங்கில நாட்டின் மிகச்சிறந்த உரைநடையாசிரியரும் சிந்தனையாளருமான ஃபிரான்சிஸ் பேகன் ஆவார்.

**5.** திறனாய்வாளரின் தகுதிகள் யாவை?

தகுதியான இலக்கியத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல்.

இலக்கியத்தை தன்வயப்படுத்தி அதன் தன்மையை அறிதல்

எதிர் வினையை ஆக்கப்பூர்வமாக வெளியிடுதல்.

---

**அலகு- 2**


விளக்கமுறைத்
திறனாய்வு
ஒப்பீட்டுமுறைத்
திறனாய்வு
மதிப்பீட்டுமுறை
திறனாய்வு
இரசனைமுறைத
திறனாய்வு
முடிவுமுறைத்
திறனாய்வு

## உள்ளடக்கம்

விளக்கமுறை என்பது, ஏற்கனவே சொன்னது போல ஒரு நிகழ்வு அல்லது ஒரு நூல். படைப்பின் பண்புகள்,விளக்கம் கூறு முயல்கின்றவரின் நோக்கம்,பயிற்சி, அவரின் மொழிவளம், விளக்கம் யாருக்காக எனும் பார்வை.

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட பொருள்களை ஒப்பிட்டு, ஒற்றுமை, வேற்றுமைகளை காண்பது. ஒன்றை இன்னோன்றனோடு ஒப்பிட்டுவதற்குக் காரணம், அதன் சிறப்பை அறிந்து கொள்வதற்கு.

மதிப்பீட்டுமுறைத் திறனாய்வு என்பது மதிப்பீடு செய்வது, இலக்கியத்தை பகுத்தாய்வதும், விளக்கியுரைப்பதும். உளவியலையோ சமுதாயவுண்மையையோ அளவிட்டுரைப்பதும மதிப்பீடு.

ஐ.ஏ.சி.ரிச்சர்ட்ஸ் இத்திறனாய்வு முறை, திறனாய்வுக் கோட்பாட்டிற்கு ஒரு தூண் போல விளங்குவதாக கூறுவார். மதிப்புப் பற்றிய கணக்கீடும், திறனாய்வுக் கோட்பாட்டின் இரண்டு தூண்கள் என்பது அவரின் கணிப்பு.

இரசனைமுறைத் திறனாய்வு என்பது உருவம், உள்ளடக்கம் பற்றியதாகும், உருவமே முதன்மையானது, அதுவே இலக்கியத்திற்கு கலை அழகை தரக்கூடியது. இலக்கியத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது, எப்படி சொல்லப்பட்டிருக்கிறது என்பதே அழகியல் ஆகும்.

# இயல் சுருக்கம்

ஒரு பொருளை சரியாகப் புரிந்து கொள்ளவோ அல்லது அதனை மேலும் அறிந்து கொள்ளவும் உதவும் வகையில் அந்தப் பொருளை வேறு சொற்களில் விளக்குவது விளக்கமுறைத் திறனாய்வு ஆகும்.
விளக்கமுறைத்திறனாய்வை புலப்பாட்டுமுறைத்திறனாய்வு என்றும் அழைப்பர். விளக்கம் என்பது ஒரே நிலையில் இருப்பதில்லை. அவை கீழ்க்கண்ட வளர்நிலைத்தன்மை கொண்டது.

□படைப்பின் பண்புகள்
□விளக்கம் கூறுதல்
□பயிற்சி
□மொழிவளம்
□விளக்கம்-மாறுபடும்தன்மை

ஆகவே விளக்கமுறைத்திறனாய்வு இலக்கியத்தின் பல்வேறுபட்ட பண்புகளை தெளிவுபடுத்துகிறது.
ஒப்பீட்டுமுறைத்திறனாய்வு : கலை இலக்கியங்களில் ஒன்றுபட்ட பண்புகளையும் வேறுபட்ட பண்புகளையும் பகுத்துப் பார்ப்பது ஒப்பீட்டுமுறைத்திறனாய்வாகும்.

ஒரே சமுதாய வரலாற்றுச்சூழல்களில் பிறக்கும் இலக்கியங்கள் ஒரே தன்மையினை கொண்டிருக்கக்கூடும். ஏற்புத் திறனைச் சார்ந்த ஓர் இலக்கியம் மற்றொரு இலக்கியத்தை தனது செல்வாக்கிற்கு உட்படுத்தக்கூடும்.□மொழியாலும் இனத்தாலும் அரசியல்-புவியியல் பரப்பாலும் வேறுபாட்டாலும் இலக்கியம் தமக்குள் ஒன்றுபட்ட பண்புகளையும் பயன்களையும் வைத்திருக்கும்.

ஒன்றுபட்டும் வேறுபட்டும் அமைகிற பின்புலங்களிலிருந்து பார்க்கிற பொழுது குறிப்பிட்ட இலக்கியத்தின் பண்புகளையும் காணமுடியும்.
ஒன்றனை மற்றொன்றுடன் ஒப்பிடுவதற்கு காரணம் ஒன்றனை விட ஒன்று சிறப்பானது என்று செம்மாப்புக் கொள்வதற்கு அல்ல.மாறாக குறிப்பிட்ட இலக்கியத்தின் பண்புகளை மேலும் சரியாகவும்இ நிறைவாகவும் விளங்கிக் கொள்வதற்காகவும் பிறருக்கு விளக்குவதற்காகவுமாகும்.

மதிப்பீட்டுமுறைத்திறனாய்வு :
குறிப்பிட்ட இலக்கியத்தின் தரம்-தகுதி-சிறப்பு- சீர்மை மற்றும் இலக்கியத்தின் மதிப்பு குறித்து பேசுவது. பல்வேறு திறனாய்வுகளிலும் மதிப்பீட்டுத்திறனாய்வு அடிநாதமாக விளங்குகிறது.

இலக்கியத்தில் சொல்லப்படும் உத்தி - உள்ளடக்கம் -வீச்சு-நேர்த்தி உள்ளிட்டவைகளால் மதிப்பீடு செய்யப்படுகிறது. திறனாய்வுக்கோட்பாட்டில் மதிப்பீட்டுத்திறனாய்வு ஒரு தூண் போன்றது.

இலக்கியத்தைப் பகுப்பாய்வு செய்வதற்கு மதிப்பீட்டுத்திறனாய்வு உதவுகிறது.
ஐ.ஏ.ரிச்சர்ட்ஸ் 'மதிப்பு பற்றிய கணக்கீடும் -தகவல் பற்றிய கணக்கீடும் திறனாய்வுக்கோட்பாட்டின் இரண்டு தூண்கள்' என்கிறார்

## வினாக்கள்

1. விளக்கமுறைத் திறனாய்வு என்றால் என்ன?

ஒரு பொருளை சரியாகப் புரிந்து கொள்ளவோ அல்லது அதனை மேலும் அறிந்து கொள்ளவும் உதவும் வகையில் அந்தப் பொருளை வேறு சொற்களில் விளக்குவது விளக்கமுறைத் திறனாய்வு ஆகும்.

2. வளர்நிலைத்தன்மையை குறிப்பிடுக.?

- படைப்பின் பண்புகள்
- விளக்கம் கூறுதல்
- பயிற்சி
- மொழிவளம்
- விளக்கம்-மாறுபடும்தன்மை

3. ஒப்பீட்டுமுறைத்திறனாய்வு என்றால் என்ன

கலை இலக்கியங்களில் ஒன்றுபட்ட பண்புகளையும் வேறுபட்ட பண்புகளையும் பகுத்துப் பார்ப்பது ஒப்பீட்டுமுறைத்திறனாய்வாகும்.

4. மதிப்பீட்டுமுறைத்திறனாய்வு என்பதை விளக்குக.

குறிப்பிட்ட இலக்கியத்தின் தரம்-தகுதி-சிறப்பு- சீர்மை மற்றும் இலக்கியத்தின் மதிப்பு குறித்து பேசுவது. பல்வேறு திறனாய்வுகளிலும் மதிப்பீட்டுத்திறனாய்வு அடிநாதமாக விளங்குகிறது.

இலக்கியத்தில் சொல்லப்படும் உத்தி - உள்ளடக்கம் -வீச்சு-நேர்த்தி உள்ளிட்டவைகளால் மதிப்பீடு செய்யப்படுகிறது. திறனாய்வுக்கோட்பாட்டில் மதிப்பீட்டுத்திறனாய்வு ஒரு தூண் போன்றது.

இலக்கியத்தைப் பகுப்பாய்வு செய்வதற்கு மதிப்பீட்டுத்திறனாய்வு உதவுகிறது. ஐ.ஏ.ரிச்சர்ட்ஸ் ‘மதிப்பு பற்றிய கணக்கீடும் -தகவல் பற்றிய கணக்கீடும் திறனாய்வுக்கோட்பாட்டின் இரண்டு தூண்கள்’ என்கிறார்.

# அலகு - 4


அணுகுமுறைத் திறனாய்வு
அறநெறி அணுகுமுறை
மார்க்சியத் திறனாய்வு
தொல்படிமவியல் அணுகுமுறை
இலக்கிய வகை நிலையியல்

**உள்ளடக்கம்**

- மனித சமுதாயத்தின் மரபு வழிப்பட்ட அறபியல் கோட்பாடுகளை, நீதி நெறிகளை மையமாகக் கொண்டு அவற்றின் அடிப்படையில் இலக்கியங்களை அணுகுவது அறவியல் திறனாய்வு ஆகும்.
- சமுதாவியல் திறனாய்வின் ஒரு பகுதியாக கருதப்படுவதற்கு உரியது.
- இலக்கிய உலகில் அறநெறிகோட்பாடு மிகவும் பழமையானது.
- இறுக்கமான நெறிமுறை காரணமாகவும் மிகையான வலியுறுத்தல்கள் காரணமாகவும் இவ்வணுகுமுறை செல்வாக்கு இழக்கத் தொடங்கியது.
- பாரத சபதம் என்று வர்ணிக்கப்படும் பாரதியின பாஞ்சாலி சபதம் அறநெறி அணுகுமுறைக்கு உட்பட்டதாகும்
- மார்க்சியம் அடிப்படையில் ஒர் அரசயல் பொருளாதார சமுதாய தத்துவமே ஆகும்
- மார்க்சிய அழகியலுக்கும், திறனாய்வுக்கும் அடிப்படை மார்சிய சித்தாந்தமே இன்றி வேறில்லை.
- திறனாய்வு அணுகுமுறைகளில் கணிசமான கவனத்திற்கு உரியது தொல்படிம வியல் அணுகுமுறை ஆகும்

## இயல் சுருக்கம்

- குறிஞ்சி, முல்லை முதலாகிய ஐந்திணை ஒழுக்கம் பற்றி பே சவந்த தொல்காப்பியர் வெறுமனே ஐந்திணை என்று சொல்லி நிறுத்தாமல் அதற்கு ஒரு நீண்ட அடைமொழியும் தருகின்றார்
- அறநெறித் திறனாய்வு அறநெறித் திறனாய்வில் முடிவாக கவனிக்கத் தக்கது அறநெறிகள் என்பவை காலம், இடம் எனும் தளத்திற்கு உட்பட்ட சார்புநிலை கொள்கைகளே ஆகும்
- இலக்கியம் சமுதாய உணர்வு நிலைகளில் ஒன்று ஏனைய சமுதாய உணர்வு நிலைகளாகிய அரசியல், சமயம்,சட்டம்,சாதி,நீதிநெறி,சித்தாந்தம முதலியவற்றோடும் அழகியல் ஆகிய அது செயல்பாட்டு உறவு கொண்டதாக இருக்கிறது.
- யதார்த்தம் என்பது ஒரு உள்ளடக்கம், ஓர் உத்தி ஆம் யதார்த்தம் என்பது இவ்விரண்டும் தான் நல்ல இலக்கியத்தில் இவ்விரண்டும் இணைந்து பரிணமிப்பதை காணலாம்.
- மார்க்சியம் சமுதாய அமைப்பினை ஐந்து வரலாற்று கட்டடங்களாக பகுக்கிறது,அவை 1. புராதன கூட்டுக்குழு அமைப்பு 2. அடிமையுடைமை 3. நிலவுடைமை 4. முதலாளித்துவம் 5. பொதுவுடைமை.
- தொல்படிமம் மற்றும் தொன்மம் என்ற கருத்து நிலையின் முக்கியமான பண்பு அது காலக்கடப்போடு கூடிய ஒரு பொதுமையை குறிக்கிறது.
- நார்த்ரோப்.்.ப்ரை தொன்மங்களின் நான்கு கட்டங்களை உட்பண்புகளோடு காட்டுகின்றார் 1.பிறப்பு கட்டம் 2. திருமணம் அல்லது வெற்றிக் கட்டம் 3.சாவு அல்லது மறைவுக்கட்டம் 4. சீரழிவு அல்லது சிதைவுக்கட்டம்

# வினாக்கள்

*1.அறவியல் திறனாய்வு என்றால் என்ன?*

மனித சமுதாயத்தின் மரபு வழிப்பட்ட அறபியல் கோட்பாடுகளை, நீதி நெறிகளை மையமாகக் கொண்டு அவற்றின் அடிப்படையில் இலக்கியங்களை அணுகுவது அறவியல் திறனாய்வு ஆகும்.

*2. அறநெறி அணுகுமுறைக்கு சான்று நூல்?*

புாரதன சபதம் என்று வர்ணிக்கப்படும் பாரதியின பாஞ்சாலி சபதம் அறநெறி அணுகுமுறைக்கு உட்பட்டதாகும்

*3. மார்க்சியம் சமுதாய அமைப்பின் வரலாற்று கட்டடங்கள் யாவை?*

புராதன கூட்டுக்குழு அமைப்பு,அடிமையுடைமை, நிலவுடைமை, முதலாளித்துவம், பொதுவுடைமை.

*4. தொன்மங்களின் நான்கு கட்டங்களை எழுதுக?*

*1.பிறப்பு கட்டம் 2. திருமணம் அல்லது வெற்றிக் கட்டம் 3.சாவு அல்லது மறைவுக்கட்டம் 4. சீரழிவு அல்லது சிதைவுக்கட்டம்.*

*5. பாரத சபதம் என்று வர்ணிக்கப்படும் நூல் எது?*

பாரத சபதம் என்று வர்ணிக்கப்படும் நூல் பாரதியின் பாஞ்சாலி சபதம் ஆகும்

# அலகு -5



## உள்ளடக்கம்

*1.*தலித் என்ற சொல் சில சாதிகளின் கூட்டு வடிவ இலச்சினையாகவும், ஒரு பண்பாட்டு அரசியலின் அடையாளமாகவும் இருக்கின்றது. ஒடுக்கப்பட்ட மக்கள் என்ற ஒரு பொதுவான பொருளில் மராட்டிய சொல்லாக இருந்து தாழ்த்தப் பட்ட வகுப்பினர் என்ற வரையறுத்த பொருளில் இன்று அகில இந்திய தன்மை பெற்ற சொல்லாகவும் ஒரு கருத்தியலாகவும் வழக்கேறியிருக்கிறது.

*2.*பெண்ணின் நோக்கில் அல்லது பெண்ணின் பார்வையில் இருந்து செயல்படும் திறனாய்வு பெண்ணியத் திறனாய்வு ஆகும்.

*3.* ∴பிரான்ஸ் நாட்டை சார்ந்த சய்மோன்தெ பௌவோ எழுதிய இரண்டாவது பாலினம்.

*4.* பெண்ணியம் பல வகையான சிந்தனைப் போக்குகளையும் செயல்பாடுகளையும் கொண்டது.

*5.* திறனாய்வில் தத்துவம் வளர்த்தெடுக்கப் படவேண்டிய ஒன்று.

*6.* இந்திய தத்துவ மரபின் சாயல் பாரதியின் கவிதைகளிலேயே அதிகம் உள்ளது.

## இயல் சுருக்கம்

இந்திய சமுக அமைப்பில் சாதியும் சமயமும் தம்முள் பிணைந்துமாற்றமும் சமதர்மம் நோக்கிய வளர்ச்சியும் காண விரும்புவோர்க்கு எப்போதும் ஒரு அறை கூவலாக இருந்து வருகின்றது.

19ம் நூற்றாண்டின் இறுதியில் அயோத்திதாசர் எம்.சி.ராஜா போன்றோரின் முன்னெடுப்பில் தாழ்த்தப் பட்டோரின் குரல் மேலெழுந்து வரத் தொடங்கியது.

தலித்துகளுக்கு இரண்டு பரிமாணங்கள் உண்டு, 1. வர்க்கம் விவசாயக் கூலிகள் 2.சாதியம் அடிப்படை உரிமை மறுப்பு தீண்டாமை

இந்திய தத்துவ மரபில் குரு சீடர் உறவு மிகவும் புனிதமானது. 'குருவே சிவனுமாய்க் கோனுமாய்' என்கிறார் திருமூலர். மௌனி, கிருத்திகா, ஜெயகாந்தன், நகுலன், ஜெயமோகன், சுந்தர ராமசாமி புனைக்கதைகளிலும், தருமு சிவராமு, பிரம்ம ராஜன், தேவதேவன் கவிதைகளிலும் தத்துவ சாயல்களைப் பார்க்க முடிகிறது.

வினாக்கள்

1. பெண்ணியத் திறனாய்வு என்றால் என்ன?

பெண்ணின் நோக்கில் அல்லது பெண்ணின் பார்வையில் இருந்து செயல்படும் திறனாய்வு பெண்ணியத் திறனாய்வு ஆகும்.

2. இரண்டாவது பாலினம் நூலின் ஆசிரியர் யார்?

சய்மோன்தெ பௌவோ

3. தலித்துகளுக்கு இரண்டு பரிமாணங்கள் யாவை?

வர்க்கம்(விவசாயக் கூலிகள்), சாதியம் ( அடிப்படை உரிமை மறுப்பு தீண்டாமை)